வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 54 of 2020

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரமேஷ் கண்ணன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | சுபாஷ் சந்திரன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02.09.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது திருப்பூர் மாவட்டம் சைபர் கிரைம் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.04.2019 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய தலைமைகாவலர் பழனிச்சாமி என்பவரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணைக்காக உதவி காவல் ஆய்வாளர் ரவி அவர்களிடம் இருந்து தொடர் புலன் விசாரணைக்காக வைத்த வழக்கு கோப்பை நான் 11.05.2019 ஆம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கின் சம்பவ இடத்தை சென்று பார்வையிட்டதில் உதவி ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படத்தை ஒத்திருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை.

2) மேற்படி சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளர் அவர்களிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் நான் அவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 38 J 0975 என்ற பதிவெண் கொண்டு Splendor

இருசக்கர வாகனத்தின் ஆவணங்களை சாட்சி ஹரிதாஸ் என்பவர் மூலம் நிலையத்தில் ஆஜர்படுத்தி பார்வையிட்டதில் விபத்து ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளின் பதிவெண் TN 38 E 0975 என்று தெரியவந்ததால் மேற்படி சாட்சி ஹரிதாஸை அன்றே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இத்தகவலை சாட்சி செல்வராஜிற்கு தெரிவித்து அவரையும் மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) அதன் பின்னர் இவ்வழக்கில் வாகன விபத்தை ஏற்படுத்தி உயிரழப்பு செய்த குற்றத்திற்ககாக எதிரி பிரதாம் குமார் என்பவரை அன்று காலை 10.00 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து மேற்படி எதிரியை தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். அதன்பின்னர் இவ்வழக்கின் எதிரி பயன்படுத்திய வாகனமான TN 38 E 0975 என்ற வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை பெற வேண்டி திருப்பூர் தெற்கு வட்டார் போக்குவரத்து அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

4) பின்னர் 13.09.2019 ஆம் தேதி மேற்படி எதிரி வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பாஸ்கர் என்பவரையும் இவ்வழக்கில் வாகன விபத்தால் காயமடைந்த திருமூர்த்தி அவர்களுக்கு முதல்உதவி செய்த பல்லடம் அரசு மருத்துவர் திரு. ஆனந்த் அவர்களையும் இவ்வழக்கில் இறந்துபோன திருமூர்த்தி அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை சான்று வழங்கிய கோவை அரசு மருத்துவமனை கல்லூரி மருத்துவர் சரவணப்பிரியா அவர்களையும் காவலர் பழனிச்சாமி மற்றும் உதவி ஆய்வாளர் ரவி அவர்களையும் தனி தனியே அன்றே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **ஆ.த.சா.அ.7** மற்றும் மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு **ஆ.த.சா.அ.8** ஆகும் மற்றும் அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **ஆ.த.சா.அ.9** ஆகும். மேலும் அன்றே இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரவுகள் 279,304(A)இதச மற்றும்

146 உ/இ 196 ,192 Of MV Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

1) வழக்கின் விபத்து பதிவேட்டை நான் கண்ணுற்றேனா என்றால் பார்த்தேன். விபத்து பதிவேட்டில் While crossing the road என்று உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் எந்த சாட்சியும் ரோட்டை கடக்கும் போது விபத்து நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றால் நான் சம்பவ இடம் சென்றேன். நான் சம்பவ இடம் போனதற்கான குறிப்புகள் எதுவும் இறுதி அறிக்கையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கீழ் நிலை அதிகாரி தயாரித்து வைத்த வழக்குகோப்பை எவ்வித விசாரணை இன்றி அதை வைத்து இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேர விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் வயதானவர் என்றால் சரிதான். அவர் கவனக்குறைவாக ரோட்டை கடந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

2) அவருடையமனைவி பாக்கியம்மாள் விபத்து ஏற்பட்ட பிறகு சத்தம் கேட்டுதான் மளிகை கடையில் இருந்து திரும்பி சென்றுள்ளார் என்று சொன்னால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொன்ன நாள் நேர விதத்தில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இறந்து போனவர் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு பெற்று தற வேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.02.17 18:42:56 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.